வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 02.03.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

சமூகத்தின் இன்றியமையா தூண்களாக பெண்கள் திகழ்கிறார்கள் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தெரிவித்துள்ளார்.

இந்தியாவும், கனடாவும், கனிம ஒத்துழைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு, மற்றும், கலாச்சார ஒத்துழைப்பு ஆகிய 3 ஒப்பந்தங்களில், இன்று கையெழுத்திட்டுள்ளன.

ஈரானில் பதட்டமான சூழல் நிலவுவதால், சென்னை விமான நிலையத்தில் இருந்து மத்திய கிழக்கு பகுதிகளுக்கு இயக்கப்படும் விமான சேவைகள், 3ஆவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன.

தமிழ்நாடு பாடத் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள தனியார் பள்ளிகளில் இன்று பொதுத் தேர்வு தொடங்கியது.

-------------------------------

குடியரசுத் தலைவர் 1 (18)

சமூகத்தின் இன்றியமையா தூண்களாக பெண்கள் திகழ்கிறார்கள் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தெரிவித்துள்ளார். இன்று, புதுடெல்லியில் உள்ள இந்திரா காந்தி உள் விளையாட்டு மைதானத்தில் பெண்களுக்கான 4 திட்டங்களை தொடக்கி வைத்த குடியரசுத் தலைவர், பெண்களின் மரியாதையும், அதிகாரமளித்தலும் ஒரு நாகரீக தேசத்தின் உண்மையான அடையாளமாக விளங்குகிறது என்று கூறினார். பிரதமரின் உஜ்வாலா திட்டம், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், மற்றும் பிரதமரின் மாத்ரூ வந்தனா

யோஜனா போன்ற முன்னெடுப்புகள் மூலம், மத்திய அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். டில்லி லட்சாதிபதி பிட்டியா திட்டம், சஹேலி பிங்க் ஸ்மார்ட் கார்டு திட்டம், மேரி பூஞ்சி மேரா அதிகார் மற்றும் இலவச எல்.பி.ஜி சிலிண்டர் திட்டம் ஆகியவை இந்த 4 திட்டங்களில் அடங்கும். தற்போதுள்ள லாட்லி திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு, டில்லி லட்சாதிபதி பிட்டியா திட்டமாக மறுசீரமைக்கப் பட்டுள்ளது. நிகழ்ச்சியில், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை இணையமைச்சர் திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா, டெல்லி துணை நிலை ஆளுநர் திரு. வினய் குமார் சக்சேனா, முதலமைச்சர் திரு. ரோகா குப்தா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குடியரசுத் தலைவர் 2 (11)

முந்தைய லாட்லி திட்டத்தின் கீழ், மருத்துவமனையில் பிறந்த ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் 11 ஆயிரம் ரூபாயும், வீட்டில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு, 10 ஆயிரம் ரூபாயும், வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டன. கூடுதலாக, 1, 6, மற்றும், 9ஆம் வகுப்புகளில் சேர்க்கை, 10ஆம் வகுப்பு தேர்ச்சி, மற்றும் 12ஆம் வகுப்பு சேர்க்கை போன்ற முக்கிய கால கட்டங்களில், 5 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டு வந்தது. தற்போது புதிய திட்டத்தின் கீழ், நிதி உதவி, மற்றும், ஒட்டுமொத்த செயல்பாடுகள் இரண்டும் கணிசமாக மேம்படுத்தப் பட்டுள்ளன. டெல்லியில் பிறந்து, கடந்த 3 ஆண்டுகளாக டெல்லியில் வசித்து, ஆண்டு வருமானம் 1 லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மிகாமல் உள்ள குடும்பங்களுக்கு, இந்த திட்டம் பயனளிப்பதாக, இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

--------------------------------

மோடி-கனடா 1 (7)

இந்தியாவும், கனடாவும், கனிம ஒத்துழைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு, மற்றும், கலாச்சார ஒத்துழைப்பு ஆகிய 3 ஒப்பந்தங்களில், இன்று கையெழுத்திட்டுள்ளன. பிரதமர் திரு. நரேந்திர மோடியும், கனடா பிரதமர் திரு. மார்க் கார்னே-யும் புதுடெல்லியில் உள்ள ஹைதராபாத்

இல்லத்தில் பேச்சு வார்த்தை நடத்தினர். இந்தியா-கனடா உத்திசார் கூட்டாண்மையின் பல்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து, இரு தலைவர்களும் விவாதித்தனர். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

மோடி-கனடா 2 (16)

(வாய்ஸ்)

இந்தியா-கனடா நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் பேச்சு வார்த்தையில், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, கனிம வளங்கள்,விவசாயம், கல்வி, ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்தும் இருநாட்டு தலைவர்களும் ஆய்வு செய்தனர். கனடா பிரதமருடன், கூட்டு செய்தியாளர் கூட்டத்தில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, மேற்காசியாவின் தற்போதைய நிலைமை கவலை அளிப்பதாகவும், பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண இந்தியா ஆதரவு அளிக்கும் என்றும், கூறினார். பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் ஆகியவை இரு நாடுகளுக்கு மட்டுமல்ல, மனிதகுலத்திற்கும் பொதுவான சவால்கள் என்றும் தெரிவித்தார். 2030ஆம் ஆண்டிற்குள், இந்தியா-கனடா இடையே உள்ள வர்த்தகம், 50 பில்லியன் டாலராக விரிவுப்படுத்த இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும், பிரதமர் கூறினார். பாதுகாப்பு தொழில்நுட்பங்கள், கடல்சார் விழிப்புணர்வு மற்றும் ராணுவ பரிமாற்றங்களை மேம்படுத்த இரு நாடுகளும் பாடுபடும் என்றும், வர்த்தகம் மற்றும் எரிசக்தி ஆகிய துறைகளில், இந்தியாவும், கனடாவும் வலுவான அடித்தளத்தை உருவாக்கி வருகிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

மோடி-கனடா 3 (4)

தொடர்ந்து இருநாட்டு பிரதமர்களும், இந்தியா-கனடா தலைமை நிர்வாக அதிகாரிகள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். முன்னதாக மத்திய வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர்

ஜெய்சங்கர், கனடா பிரதமர் திரு. மார்க் கார்னேவை, புதுடெல்லியில் சந்தித்தார்.

-------------------------------

*அமித் ஷா* (11)

பிஜேபியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா இன்று, தெற்கு 24 பர்கானாசில் உள்ள ராய்டிகியில் இருந்து, பரிபர்த்தன் யாத்திரையை தொடக்கி வைத்தார். மேற்கு வங்க மக்கள் தற்போது மாற்றத்தை எதிர்ப்பார்ப்பதாகவும், ஆளும் அகில இந்திய திரிணாமுல் காங்கிரசின் ஆட்சியால், மக்கள் அதிருப்தியில் உள்ளதாகவும், அவர் தெரிவித்தார். மாநிலத்தில், தற்போதைய ஆட்சியின் கீழ் ஊழல் அதிகரித்து வருவதாகவும், மாநில அரசின் வளர்ச்சி பாதிக்கப் பட்டுள்ளதாகவும், அவர் குற்றம் சாட்டினார். சட்டமன்ற தேர்தலுக்கு முன்னதாக, மாநிலம் தழுவிய அணித் திரட்டல் பிரச்சாரத்தின் ஒருபகுதியாக மேற்குவங்கம் முழுவதும் 9 வெவ்வேறு இடங்களில் இருந்து பரிபர்தன் யாத்திரை மேற்கொள்ளப்படும் என்று பிஜேபி அறிவித்துள்ளது.

-------------------------------

*நிர்மலா சீத்தாராமன்* (15)

வருவாய் பற்றாக்குறை மானியம் நிறுத்தப்பட்டு இருப்பது ஹிமாச்சல பிரதேச மாநிலத்தின் நிதி நிலைமையை பெரிதும் பாதித்துள்ளது என்று, அம்மாநில முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுகு தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமனை சந்தித்த அவர், 2026-27ஆம் நிதியாண்டிற்கான வருவாய் பற்றாக்குறையை ஈடுசெய்ய, சிறப்பு மத்திய அரசு உதவியின் கீழ் நிதித் தொகுப்பை வழங்குமாறு வலியுறுத்தினார். வருவாய் பற்றாக்குறை மானியம் திரும்பப் பெறுவதால், ஹிமாச்சல பிரதேசத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார். அனைத்து மாநிலங்களையும் ஒரே அளவு கோலில் மதிப்பிடுவது பொருத்தமானது அல்ல என்றும், அவர் எடுத்துக் கூறினார். மேலும், மலைப் பகுதி உள்ள மாநிலங்களின் பொருளாதாரம் தொடர்பான மதிப்பீடு மற்றும் சீர்திருத்தங்களுக்காக ஒரு

குழுவை அமைக்குமாறும், திரு. சுக்வீர் சிங், மத்திய நிதியமைச்சரை கேட்டுக்கொண்டார். மாநிலத்தின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருமதி நிர்மலா சீத்தாராமன் உறுதியளித்தார்.

--------------------------------

*சிபி ராதாகிருஷ்ணன்* (8)

புதுடெல்லியில், குடியரசுத் துணைத் தலைவர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன் இன்று புகழ்பெற்ற தமிழ் அறிஞர்கள், பாரம்பரியம், கட்டிடக் கலை, மற்றும், கலாச்சாரம் குறித்த 16ஆவது புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், அத்துறையின் இணையமைச்சர் திரு. எல். முருகன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் வெளியீட்டுப் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.

--------------------------------

*விமானம் ரத்து* (14)

ஈரானில் பதட்டமான சூழல் நிலவுவதால், சென்னை விமான நிலையத்தில் இருந்து மத்திய கிழக்கு பகுதிகளுக்கு இயக்கப்படும் விமான சேவைகள், 3ஆவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன. துபாய், அபுதாபி, ஷார்ஜா, குவைத், மஸ்கட் உள்ளிட்ட நாடுகளுக்கு செல்ல வேண்டிய 18 புறப்படு விமானங்களும். அங்கிருந்து வரும் 18 வருகை விமானங்களும் ரத்து செய்யப் பட்டுள்ளன. இதன் காரணமாக, பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விமான ரத்து எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, உரிய விவரங்களை அறிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். மத்திய கிழக்கு பகுதிகளில் உள்ள சில நாடுகளின் வான்வழிப் பாதைகள் மூடப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சென்னையில் இருந்து சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, லண்டன், தாய்லாந்து, ஜெர்மனி, ஹாங்காங்

உள்ளிட்ட நாடுகளுக்கு விமானங்கள், வழக்கம்போல் இயங்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

--------------------------------

பொதுத் தேர்வு 1 (6)

தமிழ்நாடு பாடத் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள தனியார் பள்ளிகளில் இன்று பொதுத் தேர்வு தொடங்கியது. புதுச்சேரியின் அனைத்து அரசுப் பள்ளிகளும் சிபிஎஸ்இ பாடத் திட்டத்தின் கீழ் மாற்றப்பட்டுள்ள நிலையில், கடந்த 17ஆம் தேதி முதல், 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு நடைபெற்று வருகிறது. இதுகுறித்து கூடுதல் தகவல்கள்......

(வாய்ஸ்)

பொதுத் தேர்வு 2 (19)

(வாய்ஸ்)

புதுச்சேரியில், 20 மேல்நிலை தேர்வு மையங்களிலும், காரைக்காலில், 5 மேல்நிலை தேர்வு மையங்களிலும், தேர்வுகள் நடைபெற்றன. இப்பணிகளில், மைய முதன்மை கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள், பறக்கும் படை அலுவலர்கள், வழித்தட அலுவலர்கள், மற்றும், தேர்வுக் கூட கண்காணிப்பாளர்கள் ஆகியோர் ஈடுபட்டனர். புதுச்சேரியில், 84 தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 6 ஆயிரத்து 979 மாணவ-மாணவிகளும், 173 தனித் தேர்வர்களும் தேர்வு எழுதினர்.

காரைக்காலில் 16 தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 606 மாணவ-மாணவிகளும், 112 தனித் தேர்வர்களும் தேர்வு எழுதினர். முதல் நாளான இன்று மொழிப் பாடத் தேர்வு நடைபெற்றது. காலை 10 மணிக்கு மாணவர்களுக்கு வினாத்தாள் வழங்கப்பட்டு, 10 நிமிடம் வினாக்களை படித்துப் பார்க்கவும், 5 நிமிடம் விடைத் தாளில் தங்களது குறிப்புகளை பதிவு செய்து சரிப்பார்க்கவும், நேரம் ஒதுக்கப்பட்டது. தேர்வுகள் 10.15 மணிக்கு தொடங்கி பிற்பகல் 1.15 மணிக்கு முடிவடைந்தது. தேர்வு

மையங்களுக்கு மாணவர்கள் கைப்பேசி எந்தவித தகவல் தொடர்பு சாதனங்களும் கொண்டு வர தடை விதிக்கப்பட்டிருந்தது. இன்று தொடங்கிய 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வானது, வரும் 26ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. மேலும், 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள், வரும் 10ஆம் தேதி தொடங்கி, ஏப்ரல் 6ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

-------------------------------

*நமச்சிவாயம்-புதுச்சேரி* (14)

புதுச்சேரியின் வளர்ச்சிக்காக நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். பிரதமரின் வருகையின் போது, காவல் துறை மிக சிறப்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு, பொது மக்களுக்கு எந்த இடையூறும் ஏற்படாமல், திறமையான முறையில் செயல்பட்டதற்கு, உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் பாராட்டு தெரிவித்தார். காவல் துறையினரை கவுரவப்படுத்தும் வகையில், காவல் துறை தலைமை அலுவலகத்தில், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட அனைத்து மூத்த காவல் அதிகாரிகள், காவல் கண்காணிப்பாளர்கள், மற்றும், ஆய்வாளர்கள் ஆகியோருக்கு, பாராட்டு சான்றிதழ்களை திரு. நமச்சிவாயம் வழங்கினார். மேலும் 6 ஊர்க்காவல் படையினருக்கு, காவலர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். நிகழ்ச்சியில், காவல் துறை இயக்குநர் ஷாலினி சிங், காவல் துறை துணை தலைவர் திரு. சத்திய சுந்தரம், முதுநிலை காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

-------------------------------

*பிரல்ஹாத் ஜோஷி* (16)

2030ஆம் ஆண்டிற்குள், நாட்டின் சரக்கு போக்குவரத்து செலவை 10 சதவிகிதத்திற்கும் கீழ் குறைக்க, மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று, மத்திய கிடங்கு கழகத்தின் 70ஆவது நிறுவன தினத்தில் உரையாற்றிய அவர், நாட்டின் வளர்ச்சியில், கிடங்கு மற்றும்

தளவாடத் தொழில் முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார். இந்திய சேமிப்பு கிடங்கு சந்தை, 15 சதவிகிதம் வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும், இது 2027ஆம் ஆண்டில் 35 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இ-காமர்சின் விரைவான விரிவாக்கம், சீரமைக்கப்பட்ட சில்லறை விற்பனையின் எழுச்சி, மற்றும், ரயில்வே உள்கட்டமைப்பு, போக்குவரத்து கட்டமைப்பு ஆகியவற்றின் மேம்பாடுகளால் இந்த வளர்ச்சி எட்டப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். மத்திய கிடங்கு கழகத்தின் பணிக்காக வாழ்த்து தெரிவித்த அவர், 161 லட்சம் மெட்ரிக் டன் சேமிப்புத் திறன் கொண்ட 953 கிடங்குகளை சரக்கு போக்குவரத்துத் துறை கொண்டுள்ளது என்று பெருமிதம் தெரிவித்தார்.

-------------------------------

ஜிப்மர் (5)

ஹோலி பண்டிகை வரும் 4ஆம் தேதி கொண்டாடப் படுவதை முன்னிட்டு அன்றைய தினம், ஜிப்மர் புற நோயாளிகள் பிரிவு இயங்காது என்றும், நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை தவிர்க்குமாறும் ஜிப்மர் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும் அவசர பிரிவு சேவைகள் அனைத்தும், வழக்கம் போல இயங்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------------

வைத்திலிங்கம் (7)

புதுச்சேரியில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வருகை குறித்து, செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வைத்திலிங்கம், அரசு விழா என குறிப்பிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசியல் பேசி சென்றதாக கூறினார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு தேவையான எந்த திட்டத்தையும் அவர் அறிவிக்கவில்லை என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி, மாநில அந்தஸ்து குறித்த கருத்தை அழுத்தமாக கூறியிருக்கலாம் என்றும் கூறினார்.

-------------------------------

சமூகத்தின் இன்றியமையா தூண்களாக பெண்கள் திகழ்கிறார்கள் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தெரிவித்துள்ளார்.

இந்தியாவும், கனடாவும், கனிம ஒத்துழைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு, மற்றும், கலாச்சார ஒத்துழைப்பு ஆகிய 3 ஒப்பந்தங்களில், இன்று கையெழுத்திட்டுள்ளன.

ஈரானில் பதட்டமான சூழல் நிலவுவதால், சென்னை விமான நிலையத்தில் இருந்து மத்திய கிழக்கு பகுதிகளுக்கு இயக்கப்படும் விமான சேவைகள், 3ஆவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன.

தமிழ்நாடு பாடத் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள தனியார் பள்ளிகளில் இன்று பொதுத் தேர்வு தொடங்கியது.